பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

21 03 2026 SATURDAY 7 15 AM

ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மேற்காசிய நிலவரம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி , பஹ்ரைன் மன்னர் Hamad Bin Isa Al Khalifa-வுடன் தொலைபேசி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.
- நாட்டின் எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், பல்வேறு அமைச்சகங்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளுக்கு இடையேயான தொகுதி பங்கீடு இறுதி செய்யப்பட்டுள்ளது.
- ஈரானிய கச்சா எண்ணெய் மீதான தடைகளை ஒரு மாத காலத்திற்கு நீக்கவுள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.
- ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், மும்பை - மோகன் பஹான் அணியையும், ஒடிசா - வடகிழக்கு அணியையும் வென்றன.

<<<<<<>>>>>>>

மேற்காசிய நிலவரம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி , பஹ்ரைன் மன்னர் Hamad Bin Isa Al Khalifa-வுடன் தொலைபேசி வாயிலாக ஆலோசனை நடத்தினார்

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மேற்காசியாவில் எரிசக்தி மற்றும் பொதுக் கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு இருவரும் கடும் கண்டனத்தை பதிவு செய்ததாகவும் இத்தகைய தாக்குதல்கள் உலகளாவிய உணவு, எரிபொருள் மற்றும் உரப் பாதுகாப்பில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று கவலை தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கடல்சார் போக்குவரத்தின் சுதந்திரத்தை உறுதி செய்வதன் அவசியத்தையும், கப்பல் போக்குவரத்துப் பாதைகளைத் தடையின்றியும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதன் முக்கியத்துவத்தையும் பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த உரையாடலின் போது வலியுறுத்தினார்.

புனித ரமலான் திருநாளையொட்டி பஹ்ரைன் மன்னருக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்ட பிரதமர், அங்கு வசிக்கும் இந்திய சமூகத்தினரின் நலனில் பஹ்ரைன் மன்னர் காட்டி வரும் தொடர் ஆதரவிற்கு நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

<<<<<<>>>>>>>

நாட்டின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், பல்வேறு அமைச்சகங்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உள்நாட்டில் சமையல் எரிவாயுக்கு தேவைப்படும் திரவ எரிவாயு உற்பத்தி சுமார் 40 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

மத்திய அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

மேற்காசிய நாடுகளில் இந்திய மாலுமிகள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மேற்காசிய நாடுகளில் தற்போது நிலவி வரும் சூழல் காரணமாக, இந்தியர்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் மேற்காசியாவிலிருந்து நூற்றுக்கணக்கானோர் பாதுகாப்பாக தாயகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அவர்களை அழைத்து வர சிறப்பு விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்படும் நிதிச் சுமைகளைக் குறைக்கவும், இடர் காப்பீடு வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் போது, பெயர்களைச் சேர்ப்பது அல்லது நீக்குவது தொடர்பான மேல்முறையீடுகளை விசாரிக்க 19 மேல்முறையீட்டு தீர்ப்பாயங்களை தேர்தல் ஆணையம் அமைத்துள்ளது.

கடந்த 10-ஆம் தேதி உச்ச நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் படியும், கல்கத்தா உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியின் பரிந்துரையின் அடிப்படையிலும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வடக்கு 24 பர்கானாக்கள், கிழக்கு மேதினிப்பூர், கூச் பெஹார் மற்றும் ஹவுரா போன்ற மாவட்டங்களில் வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட நீதித்துறை அதிகாரிகளால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை இந்தத் தீர்ப்பாயங்கள் விசாரிக்கும்.

இந்த அறிவிப்பு உடனடியாக அமலுக்கு வருவதாகவும், அந்தந்த மாவட்டங்களில் உள்ள அனைத்து மேல்முறையீடுகளும் தீர்க்கப்பட்டவுடன் இந்தத் தீர்ப்பாயங்கள் கலைக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் மேலும் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>>

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளுக்கு இடையேயான தொகுதி பங்கீடு இறுதி செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் திரு. ரங்கசாமி தலைமையிலான NR காங்கிரஸ் 16 இடங்களிலும். பிஜேபி 10 இடங்களிலும், அஇஅதிமுக மற்றும் லட்சிய ஜனநாயக கட்சி தலா 2 தொகுதிகளிலும் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு NR காங்கிரஸ் தலைமை வகிப்பதாகவும், அக்கட்சியின் தலைமையில் தேர்தலை சந்திப்பதாகவும் புதுச்சேரிக்கான பிஜேபி மேலிடப் பொறுப்பாளர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, புதுச்சேரியில் வேட்புமனு தாக்கல் செய்ய நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

தொகுதி பங்கீடு உறுதி செய்யப்படாத நிலையிலும், திமுக மற்றும் காங்கிரஸ் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் தங்களுக்கு வெற்றி வாய்ப்பு என்றும் கருதும் தொகுதிகளில் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன.

<<<<<<>>>>>>>

ஈரான் கச்சா எண்ணெய் மீதான தடைகளை ஒரு மாதத்திற்கு நீக்கவுள்ளதாக அமெரிக்க அதிபர். திரு டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த தற்காலிகத் தடை நீக்கத்தின் மூலம் கச்சா எண்ணெய் விநியோகத்தை அதிகரித்து, சர்வதேச சந்தையில் அதன் விலையைக் கட்டுக்குள் கொண்டுவர அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், மேற்காசியாவில் அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டு படைகளுக்கும், ஈரானுக்கும் இடையே நிலவி வரும் மோதல் தீவிரமடைந்து வருகிறது.

வளைகுடா நாடுகளில் உள்ள முக்கிய எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் புதிய ராணுவத் தாக்குதல்களும், அதற்குப் பதிலடியாக நடத்தப்படும் எதிர் தாக்குதல்களும் அப்பகுதியில் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளன.

பதற்றமான சூழல்களுக்கு இடையே அங்குள்ள மக்கள் ரமாலான் பண்டிகை மற்றும் பாரசீகப் புத்தாண்டான 'Nowruz சையும் கொண்டாடி வருகின்றனர்

<<<<<<<>>>>>>>

நாடுமுழுவதும் ரமலான் பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த நன்னாளில், இஸ்லாமியர்கள் பாரம்பரிய உடைகளை அணிந்து மசூதிகள் மற்றும் ஈத்கா மைதானங்களில் திரண்டு சிறப்புத் தொழுகைகளை நடத்தி வருகின்றனர்.

தொழுகைக்குப் பிறகு ஒருவருக்கொருவர் கட்டித்தழுவி ரம்ஜான் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டனர். மேலும், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் இல்லங்களுக்குச் சென்று இனிப்புகளைப் பகிர்ந்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தலைநகர் டெல்லியில், வரலாற்றுச் சிறப்புமிக்க ஜும்மா மஸ்ஜித், ஃபதேபுரி மஸ்ஜித் மற்றும் ஷாஹி ஈத்கா ஆகிய இடங்களில் சிறப்பு தொழுகைகள் நடைபெற்றன.

இதனையொட்டி தில்லி மாநகரம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மும்பை, கொல்கத்தா, ஹைதராபாத். மீரட் உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலும் ரமலான் பண்டியையை மக்கள் உற்சாகமாக கொண்டாடி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

உலக வன நாள் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

காடுகள், புவி வெப்பமயமாவதை தடுப்பதோடு, மண்அரிப்பையும் தடுக்கின்றன.

தமிழகத்தின், தருமபுரி மாவட்டத்தில் காப்புக் காடுகள் மூலம் வனப்பரப்பு அதிகரிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி 42 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>>

தென்கொரியாவின் மையப்பகுதியில் அமைந்துள்ள டேஜியோன் நகரில் உள்ள வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் இன்று ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர்.59 பேர் காயமடைந்தனர்.

மேலும், 4 பேரைக் காணவில்லை என்றும் காயமடைந்தவர்களில் 25 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாகவும் அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தீயைக் கட்டுப்படுத்தவும், மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும் 500-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள், காவல்துறையினர் மற்றும் அவசரகால மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

இந்த தீ விபத்து குறித்து கவலை தெரிவித்துள்ள தென்கொரிய அதிபர் திரு லீ ஜே மியுங் , மீட்புப் பணிகளுக்குத் தேவையான உதவிகளையும் வழங்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>>

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை அணி, 1-0 என்ற கோல்கணக்கில் மோகன் பஹான் அணியை வென்றது.

மற்றொரு போட்டியில் ஒடிசா அணி 4-1 என்ற கோல்கணக்கில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை தோற்கடித்தது.

இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை அணி – கோவா அணியையும், கேரள அணி – பஞ்சாப் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<<>>>>>>>